(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 63.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 ஏப்பிறல் 06, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

94/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தின் வினைத்திறனின்மை மற்றும் கவனயீனம் காரணமாக அரசாங்கம் ரூபா 388 பில்லியன் பணத்தொகையை இழந்துள்ளதென்பதையும்;

(ii) இத் தொகையில் சேர் பெறுமதி வரித் தொகை மோசடியின் ரூபா 3.9 பில்லியனும் உள்ளடங்குகின்றதென்பதையும்;

(iii) இதற்கமைய, சேர் பெறுமதி வரி மோசடியின் மூலம் அரசாங்கம் இழந்துள்ள பணத்தொகையானது, அரசாங்கம் இழந்துள்ள மொத்தப் பணத் தொகையில் அண்ணளவாக 0.5% மாத்திரமே என்பதையும்;

(iv) மிகுதி 99.5% பற்றி இற்றைவரை விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேர் பெறுமதி வரித் தொகை மோசடியைத் தவிர மிகுதி ரூபா 384.1 பில்லியனை அரசாங்கம் இழக்கச் செய்தமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்துகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

271/ '15

2.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முன்னாள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர், உலக சந்தையின் விலைகளுக்கு ஏற்ப உள்ளூர் சந்தையில் விலை மாற்றமடையும் விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்துவதாக 2015 சனவரி மாதம் 16 ஆந் திகதி அறிவித்தார் என்பதை அவர் அறிவாரா;

(ii) இதுவரை அத்தகைய ஒரு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படாமைக்கான காரணம் யாது;

(iii) அத்தகைய ஒரு விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

297/ '15

3.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கான பாடசாலையொன்று இல்லாத காரணத்தினால் அனுராதபுரம் மாவட்டத்தில், இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில், அளுத் தென்னேவ கிராமத்தில் 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சிறுவர்களுக்கு தூர இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குச் செல்ல நேர்ந்துள்ளது என்பதையும்;

(ii) உரிய வீதிக் கட்டமைப்பு அல்லது பொதுப் போக்குவரத்து சேவை இன்மையால், நாளாந்தம் அண்ணளவாக 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டியேற்பட்டுள்ளதால் இந்த சிறுவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கவனத்தில் கொண்டு பிரதேச வாசிகள் 1 1/2 ஏக்கர் காணியில் இரண்டு கட்டடங்களை நிர்மாணித்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி காணியையும் கட்டடத்தையும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்று அதனை அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக பிரகடனம் செய்யுமாறு பிரேரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) උමැප/කැකි/අසං-01/23 ஆம் இலக்கம் அத்தியாயம் II மற்றும் 2011.01.14 ஆம் திகதிய கடிதம் மூலம் கெக்கிராவ வலயக் கல்வி பணிப்பாளரினால் வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பின்தங்கிய கிராமத்தில் வாழும் இந்த பிள்ளைகளின் நலன் கருதி தென்னேவ கிராமத்தில் அரசாங்க பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

380/ ’15

4.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சினால் ஜிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை பெருக்கெடுப்பதை நிறுத்துவதற்கான கருத்திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய கருத்திட்டத்திற்காக சீனாவின் CAMC இன்ஜினியரிங் கம்பனி லிமிடட் எனும் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) உடன்படிக்கை கைச்சாத்திடாது மேற்படி கம்பனிக்கு 2014.12.31 ஆம் திகதியன்று 2568 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 998,576,311/- மற்றும் 2015.01.31 ஆம் திகதியன்று 99/1 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 1,003,136,336/- மற்றும் 99/2 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 2,009,342,336/- செலுத்தப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய தகவல்கள் யாதென்பதையும்;

(vi) அவ்வாறு பணம் செலுத்தப்பட்டுள்ளதன் அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக 2015 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 40 மில்லியன் தொகை மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளபோது இவ்வளவு பணத்தொகையை செலுத்துவது எவ்வாறென்பதையும்;

(ii) இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள பணத் தொகையை நியாயப்படுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், ஏனென்பதையும்;

(iv) இன்றேல், இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதையும்;

(v) இவர்களுக்கு தண்டனை வழங்குவாரா என்பதையும்;

(vi) அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

401/’ 16

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) றுகுணு பல்கலைக்கழகத்தில் நீர்வாழ் உயிரினக் கூறினை நிர்மாணிப்பதற்காக காணி சுவீகரிக்கப்படுதல் நடைபெற்றுள்ளதா;

(ii) ஆமெனில், சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி உரிமையாளருக்கு இன்றளவில் இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) மதிப்பீட்டுப் பெறுமதிக்கிணங்க தெவிநுவர, ரஸ்ஸந்தெணிய, திரு. எஸ். எஸ். குணசேகரவுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்துதல் தாமதமடைந்துள்ளது ஏன்;

(iii) குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படும் திகதி யாது;

(iv) இழப்பீட்டுத் தொகையை துரிதமாக செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

105/ '15

6.

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் ஐரோப்பியக் கண்டத்திலுள்ள நாடுகளில் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் ஐரோப்பியக் கண்டத்திலுள்ள நாடுகளில் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

403/ ' 16

7.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— சுகாதாரம் போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியில் பௌதிக மற்றும் மனித வளங்கள் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும் ;

(ii) இதன் காரணத்தினால் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவ தாதிமார்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும் ;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியில் மதியுரை வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடும் ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை ;

(ii) இந்த ஆலோசகர்களின் எண்ணிக்கை போதுமானதா;

(iii) தேவைப்படும் ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன்;

(iv) நடைமுறைக் கல்வி நடவடிக்கைகள் போதிய அளவு நடைபெறுகின்றதா ;

(v) இன்றேல், ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மண்டப வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகளை மாணவ தாதிமார்களுக்கு துரிதமாக வழங்க மாற்று வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) தற்போது பயிற்சி பெறும் மாணவ தாதிமார்களை காலி அல்லது கொழும்பு தாதிமார் கல்லூரிக்கு இணைத்து விட்டு கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியை நவீனமயப்படுத்தும் முன்மொழிவு அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், மாணவ தாதிமார்களுக்கு கற்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

409/ ’15

8.

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை பிரதேசத்தில் மீனவர் சங்கமொன்றின் சார்பாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் பெண் அரசியல்வாதியொருவருக்கு ரூபா 750 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவருடைய பெயர் யாதென்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கடன் தொகையை வழங்குவதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ளவை யாவை என்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகையில் தற்போது மீள அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், தொடர்ச்சியாக கடன் செலுத்துதல் தவறவிடப்பட்டுள்ளமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) அது தொடர்பான முழுமையான விபரங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் கடன்களுக்கு பன்சாலைகளின் உறுதிகள், குத்தகை முறையில் அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட காணிகள் அல்லது படிகக் கற்களை பிணையாக வைக்க முடியுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ எட்வட் குணசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரஞ்சன் ராமநாயக்க பவுண்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"குல்லியத்துல் இமாம் சாபிஈ அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ முஹமட் நவவி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"நிடா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

பா. 152/ '15

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ அநுர திசாநாயக்க
கௌரவ அஜித் பி. பெரேரா
கௌரவ இரான் விக்கிரமரத்ன
கௌரவ எட்வட் குணசேகர
கௌரவ திலிப் வெதஆரச்சி
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ டி.வீ. சானக
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ இம்ரான் மஹ்ரூப்
கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ கருணாரத்ன பரணவிதான

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,- வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிகுழு,-

இலங்கைப் பிரசைகள் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை இருக்க வேண்டியது அடிப்படை மனித உரிமையாகுமென்பதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கைப் பிரசைகளுக்கு இலங்கையில் நடத்தப்படுகின்ற தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாய்ப்பு இதுவரை கிடைக்காதுள்ளதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள், இலங்கையின் தற்போதைய பொருளாதாரத்தை பேணிக்கொண்டுநடாத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருவதன் மூலம் பெரும் பங்களிப்பை வழங்குகின்றார்கள் என்பதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்கள் கௌரவமான முறையில் தொழில் புரிவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கிக் கொடுத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகுமென்பதாலும்;

தேர்தலில் வாக்களிப்பது வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்களின் அடிப்படை உரிமையொன்றாகும் என்பதாலும்; மற்றும்

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்கள் மற்றும் அவர்களுக்கு தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பாக அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளுடன் கூடியதாக பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கேற்ற வகையில் பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) மேற்படி குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்ற நிலையியல் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களை விஞ்சாத எண்ணிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேற்படி குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை தீமானிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கு, பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் தோற்றுமாறு எந்தவொரு ஆளுக்கும் கட்டளையிடுவதற்கும், அத்தகைய ஆட்கள் வசம் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற ஏதேனும் கடிதம், புத்தகம், அறிக்கை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சியாளர்களை வாய்மொழி மூல விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மையினை விசாரித்தறிவதற்கு அல்லது வேறு விதத்தில் உறுதி செய்து கொள்வதற்கும், குழுவின் தவிசாளர் அல்லது குறித்த பணிக்காக விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஆளொருவரால் உறுதிப்பிரமாணம் அல்லது சத்தியப்பிரமாணம் பெறப்பட்ட சாட்சியாளர்களை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவி புரிவதற்கென ஏற்புடைய துறைகளின் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுவதற்கும்; மற்றும்

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து கூட்டங்களை நடாத்திச் செல்வதற்கும்;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. குழுவானது, தனது முதலாவது கூட்டம் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படும் வேறு எந்தவொரு காலகட்டத்தினுள்ளும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* 3.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதும், 34 ஆம் வாசகத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 18 ஆந் திகதிய 1950/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

தகவலுக்கான உரிமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1954/34 ஆம் இலக்க 2016 பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 41 ஆவது பிரின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளையின் 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

நிதி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240 - நிகழ்ச்சித் திட்டம் 2,— †இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திற்குப் புறம்பாக அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து 2016 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை (ரூபா. 55,000,000) விஞ்சாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமாக.

சேவைகள் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 2015 நிதியாண்டின் நானாவித நிதியிலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் இலக்க முற்பணக் கணக்குகளைத் தீர்த்தல்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 02 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 03 | - | கணக்கீட்டு உதவி |
| | | | மொத்தச் செலவினம் = ரூபா **55,000,000** |
| | | | (ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா மட்டும்) |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2016 மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 15.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினால் ஆக்கப்பட்டு 2015 யூலை 21 ஆம் திகதிய 1924/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி ஒழுங்குவிதிகள் (அனுமதிப் பத்திரம்) மற்றும் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணு சக்தி (செயன்முறை மேற்கொள்வதற்கான எண்ணம் பற்றிய அறிவித்தல்) ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.